REGD: No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 213

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: மாசி 7உ. வியாழன் (18—2—54) ★ ★ ★ வெளியீடு: மாசி 8உ. வெள்ளி (19—2—54)

'ஒன்றுபட்டிருந்த திராவிட நாடு மொழியின் பெயரால் சிதைந்தது'

—(:)—

'தமிழையும், தமிழ்வழி மொழிகளையும் அழிப்பது என வட நாட்டினர் துணிந்து விட்டனர்'

—(:)—

'இந்திக்கு இடம் கொடுத்தால் ஒட்டகத்திற்கு இடம் தந்த அராபியன் கதையாகத்தான் முடியும்'

1938—இந்தி எதிர்ப்புப் போரை சுட்டிக் காட்டி 'தமிழ் நாடு' இந்தி வெறியர்களைச் சாடுகிறது

★

ஒரு மொழி, தன்னுடைய நாட்டில், ஆதிக்கம் செலுத்தப் பிற மொழிகளின் தொடர்பை அறவே நீக்க வேண்டியது அவசியம்.

ஒரு மொழி வளர்ச்சி அடையப் பிற மொழிகளின் சொற்களே கூடாது என்ற கிளர்ச்சி வளர்ந்துவரும் இக்காலில், இந்தி மொழியின் எழுத்துக்களையே பிற மொழியாளர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், மைசூர் மாகாணத்தில் எல்லாத் தொடக்கப் பள்ளிகளிலும் கன்னட மொழியைக் கற்றுக்கொள்ளும் மாணவர்களும் இந்தி எழுத்துக்களையும், கன்னட எழுத்துக்களையும் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கும் என்றும், மைசூர் முதலமைச்சர் அனுமந்தையா கூறியிருக்கிறார்.

வடநாட்டிற்கும், தென்னாட்டிற்கும் மொழியினால் ஏற்படும் சிக்கலை ஒழிக்க இந்தி மொழி வெறியர்களின் சுயநலத்திற்கு அனுமந்தையா வசப்பட்டுவிட்டது வருந்தத்தக்கதே.

'என்றுமுள தமிழ்' என்று பலராலும் பாராட்டப்படும் தமிழ், இந்திய நாட்டின் தென் பகுதியில் பேசப்பட்டு வருகிறது. கன்னடமும், தெலுங்கும், மலையாளமும், துளுவும், தமிழ் மொழியினின்று தோன்றியவை.

ஒன்றுபட்டிருந்த திராவிட நாடு (பழங்காலத் தமிழகம்) மொழியின் பெயரால் சிதைந்து, இன்று, ஒரு சிறு பகுதியில் தமிழ் வாழ்ந்து வருகிறது.

எல்லா மொழிகளும் அழிந்த பின்னும், தமிழ் மட்டும் இன்னும் வாழ்ந்திருப்பது, இந்தி மொழியாளர்களின் கண்களை உறுத்திக்கொண்டிருக்கிறது. ஆகையால், இந்தி எழுத்துக்களின் உதவியைக் கொண்டு, தமிழையும், தமிழின்பாற்பட்ட அத்தனை மொழிகளையும் அழித்து, நாட்டின் மொழி ஒன்று — அது இந்தி என்று கூற வடநாட்டினர் திட்டமிட்டு, அதனைச் செயலாற்றவும் துணிந்து விட்டனர்.

தென்னாட்டில் சிறப்புடன் வாழ்ந்த தமிழ், வடமொழிச் சொற்களையும், சிற்சில வடமொழி எழுத்துக்களையும் தன்னகத்தே கொள்ள அனுமதித்ததால், தமிழ் மொழியினின்று பல கிளை மொழிகள் தோன்றி வளர்ந்தன.

இந்நிலையில் இன்று கன்னடியர்கள், இந்திக்கு இடங்கொடுப்பார்களேயானால், அரபு வியாபாரி ஒட்டகத்திற்குக் கூடாரத்தில் இடங்கொடுத்த கதையாய்த்தான் முடியும்.

இந்தி எழுத்துக்களைக் கற்பிக்க முன்வந்தால், கன்னடமும், ஆரியம் போல் அழிந்து ஒழிந்து, சிதைந்து விடுமெனக் கூற விரும்புகிறோம்.

தமிழர்கள், இந்தி எதிர்ப்பு இயக்கம் 1938-ம் ஆண்டில் தொடங்கியிருக்காவிட்டால், இந்தி வெறி பிடித்தவர்கள் நம்முடைய மொழியையும் அழிக்கத் திட்டமிட்டிருப்பார்கள்.

நம்முடைய நல்வினைப் பயனால் இந்தியா முழுவதும், இப்பொழுது, தமிழின் பெருமையை நன்குணர்ந்திருக்கிறது.

ஆகையால், தமிழர்கள் விழிப்புடனிருந்து, தமிழை அரசியல் மொழியாக்கி, அதனை அரியணையின் மீது ஏற்றத் தவறினால், இந்தி, அரசியல் மொழியாகிவிடுமெனக் கூற விரும்புகிறோம்.

---

9 மாதத்தில் 94 கோடி ரூ.

வருமான வரி மூலம் கிடைத்ததாம்!

புதுடில்லி, பிப். 18—

1953—54-ல், முதல் ஒன்பது மாத காலத்தில், வருமான வரி மூலம் மொத்தம் சுமார் 94 கோடி ரூபாய் வசூலாயிற்று.

ரயில்வேயின் முதுகெலும்பு!

புதுடில்லி, பிப். 18—

இந்திய ரயில்வேக்களுக்கு பிரயாணிகள் போக்குவரத்தின் மூலம், இப்பொழுது கிடைக்கிற வருமானம் 50 ஆண்டிற்கு முன்பு கிடைத்த வருமானத்தைப் போல சுமார் 11 மடங்காகும். 1952-53ல் வருமானமாகக் கிடைத்த ஒவ்வொரு நூறு ரூபாய் தொகையிலும், 88 ரூபாய், மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளிடமிருந்து கிடைத்ததாகும்.

தாய் மொழியில் கல்வி பெற உருது மாணவர்களுக்குத் தடை

—(:)—

உருதுவை வட்டார மொழியெனக் கட்டளை இடக் கோரிக்கை

—(:)—

உத்திர பிரதேச சர்க்கார் போக்கை எதிர்த்து குடியரசு தலைவரிடம் மனு

புதுடில்லி, பிப். 16—

"உத்திர பிரதேச சர்க்கார் கல்வி இலாகா அங்குள்ள எல்லா தொடக்கப் பள்ளிகளிலும், இந்தியைக் கட்டாய பாடமாக்கி உத்திரவிட்டிருக்கிறது."

"இந்த உத்திரவு இந்திய சர்க்காரின் கட்டளைக்கும், இந்த உத்திரவை ஒப்புக் கொண்டுள்ள முதல் மந்திரியின் கருத்துக்கும் நேர்மாறானதாக இருக்கிறது. அதுவுமல்லாமல் இவ்வுத்திரவின் விளைவாக, முனிசிபல் நிர்வாகத்தில் உள்ள எல்லா தொடக்கப் பள்ளிகளில் இருந்தும் உருது விலக்கப்பட்டுவிட்டது. அதே காலத்தில் மாவட்டக் கழகங்களின் பராமரிப்பில் உள்ள பள்ளிக்கூடங்களில் இருந்தும் உருது ஒழிக்கப்பட்டுவிட்டது."

மேற் குறித்த சர்க்கார் போக்கை எதிர்த்துப் பரிகாரம் காணும் வகையில், அகில இந்திய உருது சங்கத்தின் தலைவரான டாக்டர் ஜாகீர்-உசேன் தலைமையில், 12 உறுப்பினர் கொண்ட தூதுக் குழுவினர் குடியரசுத் தலைவரை சந்தித்து மனு ஒன்றைக் கொடுத்துள்ளனர்.

அந்த மனுவில் ஜாதிப் பாகுபாடு பாராமல், உருதுவைத் தாய் மொழியாகக் கொண்ட 21 லட்சம் மக்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

தொடக்கக் கல்விப் பயிற்சி முதல் கட்டத்தில் சிறுவர்களுக்கான போதனை, அவர்களின் தாய் மொழியிலேயே இருக்க வேண்டும் என்ற 'இந்திய சர்க்கார் கட்டளைக்கு மாறானது' என்று எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

மத்திய சர்க்காரின் இந்தக் கட்டளையை உத்திர பிரதேச முதல் அமைச்சரான கோவிந்த வல்லப பந்தும் ஒப்புக்கொண்டுள்ளதற்குப் புறம்பாக இக்காரியம் நடைபெற்றுள்ளது என்று மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

உத்திர பிரதேச சர்க்கார் போக்கின் காரணமாக, உருதுவைத் தாய் மொழியாகக் கொண்ட சிறுவர்கள், தங்கள் தாய் மொழியில் தொடக்கக் கல்வியைப் பெற முடியாமல் போகிறது என்றும், அதனால் மாநிலத்தில் உள்ள ஆதாரப் பள்ளிக் கூடங்கள் அனைத்திலிருந்தும் உருது ஒழிக்கப்பட்டுவிட்டது என்றும் மனுவில் விளக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசியல் சட்டம் 347-வது பிரிவுப்படி தங்கள் உருது மொழியினரின் நியாயமான கோரிக்கைக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொள்ளப்பட்டு இருக்கிறது. தலைவரும் ஆவன செய்வதாக வாக்களித்துள்ளார்.

புற்றுநோய் வியாதி ஆராய்ச்சி!

—:—

85 லட்சம் டாலர் நன்கொடை

மாண்ட்ரீல், பிப். 18—

டொரண்டோவில் புற்று நோய் வியாதி சிகிச்சைக்கான ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்த ஒன்டேரியோ புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகம் 85 லட்சம் டாலர்களை செலவிடவிருக்கிறது. கனடா சர்க்கார் 10 லட்சம் டாலர்களை கொடுத்துதவும்.

என்ன காரணமோ?

லண்டன், பிப். 18—

கோதுமைக்காக ரஷ்யாவிற்குக் கொடுத்திருந்த ஆர்டரை ஜெர்மனி ரத்துசெய்து விட்டது என்றும், இதற்குப் பதிலாகக் கோதுமையை அமெரிக்காவிலிருந்து வாங்கப்போவதாகவும் பிறகு செய்திகள் கூறுகின்றன.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 18—2—54 வியாழன்

பத்து நாட்கள்!

இந்தியத் துணைக் கண்டத்தில் ஆங்கிலேயர் புகுத்திய கல்வி முறை, வெறும்'குமாஸ்தா' கல்வி அமைப்பாகும்; அரசியல் விடுதலை பெற்றுள்ள இந்தியா அவ்வமைப்பை ஒரு கணமும் நீடிக்க விடக்கூடாது; உடனடியாக திருத்தி அமைத்தாக வேண்டும் என்ற ஒருவகை தீவிரமான குழப்பம் காங்கிரஸ் கட்சியினரிடை பல காலமாகவே இருந்து வருகிறது. ஆங்கிலேயர் புகுத்திய கல்வி முறையை ஒவ்வொரு கட்டத்திலும் மாற்றி அமைப்பதற்கான, காங்கிரஸ்கட்சியினர் கண்டுள்ள திட்டங்களோ, கல்வியின் முடிந்த நோக்கத்தையும், கல்வியின் தரத்தையும் சீர்குலைப்பதாகவே பெரிதும் இருந்து வருகின்றன.

காங்கிரஸ் கட்சியினர் கண்ட கோணல் முடிவுகளுக்கு, ஒப்புக்கொள்ளப்பட்ட கல்வி நிபுணர்களிடமிருந்து எத்தகைய பலமான எதிர்ப்புகள் ஐயத்திற்கிடமின்றி எழுந்த போதிலும், ஆளவந்தார்களாக உள்ளோம் என்ற ஆணவ முனைப்பில் காங்கிரஸ் கட்சியினர், தங்கள் கோணல் மதி விளைவுகளை நடைமுறைக்குக் கொண்டுவரும் பிடிவாதப் போக்கைப் பின்பற்றுகின்றனர். காங்கிரஸ் கட்சியினர் கல்வித் துறையில் வகுத்துள்ள திட்டங்களின் கோமாளித் தனத்தை விளக்க எடுத்துக்காட்டாக கல்வித் துறையில் சிறிதளவும் பயிற்சி இல்லாத கனம் ஆச்சாரியார் புகுத்தியுள்ள தொடக்கக் கல்வித் திட்டத்தைக் குறிப்பிடலாம். அத்திட்டத்திற்கு நாட்டில் ஏற்பட்டுள்ள பலதிறப்பட்ட எதிர்ப்புகளே போதும், அத்திட்டத்தினால் சிறுவர்கள் கல்வித் துறையில் விளைய இருக்கும் கேடுகளை அறிந்துகொள்வதற்கு! எதிர்ப்பு வலுக்க வலுக்க கனம் ஆச்சாரியாரின் பிடிவாதமான பேய்த்தன்மையும் வலுத்துக் கொண்டே போகிறது. அவருடைய பிடிவாதத்திற்கு அவரிடம் சிக்கியுள்ள அதிகாரத்தைத் தவிர வேறு ஒரு காரணமும் கிடையாது என்பது விளக்கம். நிற்க,

தங்கள் கருத்துப்படி கல்வித் துறையை மாற்றிக் கெடுப்பதில் காங்கிரஸ் ஆளவந்தார்கள் காட்டுகின்ற ஆர்வத்தின் அளவிற்கு, எந்தக் கல்வி முறையின் வெற்றிக்கும் அச்சாணியாக உள்ள ஆசிரியர்களின் வாழ்க்கை நிலையைக்குறித்து கவலை கொள்வது கிடையாது. ஆசிரியர்களின் நியாயமான குறைகளை கண்டறிந்து, அதைக் களைய நடவடிக்கை எடுப்பதில் அலட்சியமாக இருந்தபோதிலும், ஆசிரியர்களின் பொறுப்புகளையும், கடமைகளையும் பற்றி அவர்களிடம் தினம் தினம் வலியுறுத்திக் கூறவும் அவர்களுக்குள்ள மிச்சம் மீதி உரிமைகளைப் பறிமுதல் செய்ய புதுப் புது கட்டளைகளைப் பிறப்பிக்கவும், காங்கிரஸ் ஆளவந்தார்கள் கிஞ்சிற்றும் தயக்கம் காட்டுதில்லை. இத்துறையிலும், கல்வித் துறையை சீர்குலைப்பதற்கு அவர்கள் மேற்கொள்ளும் தீவிரத்தைக் காட்டிலும் கூடுதலாகக் காட்டுகிறார்கள்

ஆசிரியர் பணி சமூகத்தின் முக்கியப் பகுதியில் வைத்து எண்ணப்படத்தக்கதாகும். அவர்களால் எதிர்காலத்தை அமைதியாக ஆக்கவும் முடியும், அழிக்கவும் முடியும். அவர்களுடைய ஆற்றல் பகட்டாக வெளியே தெரியக்கூடியதல்ல நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கக்கூடிய சிற்பிகள் ஆசிரியர்கள்தான் என்று கூறுவது ஒருக்காலும் மிகையாகாது.

சமூகத்தின் உச்ச நிலையில் வைத்து மதிக்கப்பட வேண்டிய அவர்களுடைய இன்றைய நிலை மிகவும் பரிதாபத்திற்குரியதாக இருந்துவருகிறது. சமுதாயத்தின் ஒதுக்கிடத்தில் அவர்கள் தள்ளப்பட்டு இருக்கிறார்கள். அந்த ஒதுக்கிடத்தில் இல்லாமை என்ற அரிப்புபூவும், பசி என்ற பெரு நோயும், பிணிஎன்ற சாக்காடும் அவர்களை ஒவ்வொரு வினாடியும், அரித்துத் தின்றுக்கொண்டு இருக்கின்றன. கவலை தோய்ந்த முகத்தோடும், அச்சம் நிறைந்த நெஞ்சோடும், சாவை நோக்கி தளர் நடைபோட்டுச் செல்லும் சமுதாயத்தின் சோகச் சித்திரங்களாக அவர்கள் இன்று காணப்படுகின்றனர். யாக்கை அகத்ததோ புறத்ததே என்று அறியாது வறுமையில் வீழ்ந்துகிடக்கும் அவர்களிடம், அவர்கள் நிலையை உயர்த்த நெஞ்சாலும் தீண்டாத காங்கிரஸ் ஆளவந்தார்களுக்கு, அவர்களுக்கு உபதேசம் செய்வதென்றல் மட்டும் நாக்கு முழநீளம் நீண்டுவிடுகிறது.

தங்களுடைய நிலையை உயர்த்திக்கொள்ள மேற்கு வங்கத்தின் 23,000 ஆசிரியர்கள் அறப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அந்த அறப்போராட்டத்தின் காரணமாக ஏறத்தாழ 10 லட்சம் மாணவர்களுக்கு, அவர்கள் விரும்பாத நிலையிலேயே பள்ளிக்குச் செல்வதிலிருந்து ஓய்வு கிடைத்திருக்கிறது.

அந்த ஆசிரியர்கள் நேரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளதற்கும், அவர்களைக் குறை கூறுவதற்குத் துளியும் இடமில்லை. கடந்த ஐந்து ஆண்டுகளாக அவர்கள் தங்களுடைய இன்றியமையாதக் குறைகளுக்கு பய பக்தியோடு பரிகாரம் தேடினர். அவர்களுடைய தோத்திரம் வங்கத்தில் எழுந்தருளி இருக்கும் தேவனின் திருச் செவிகளில் புகவில்லை. ஐந்து ஆண்டுகளின் ஏமாற்றத்திற்குப் பிறகே வங்க ஆசிரியர்கள் அறப்போர் கொடியை உயர்த்தினர். அப்படி போர்க் கொடி உயர்த்தி இன்றோடு பத்து தினங்கள் ஆகின்றன.

முதல் ஐந்து நாட்கள் வரை, ஆசிரியர்களின் அறப்போர், பெருமையாகக் கூறத் தகுந்த அமைதியை அரணாகக் கொண்டுதான் நிகழ்ந்தது. மேற்கு வங்க கவர்னரை அவர்கள் நேரில் சந்தித்து, தங்கள் குறைகளைத் தெரிவித்துப் பரிகாரம் தேட முயன்றனர். கவர்னரைக் குழுகள் சந்தித்து, குறைகளை எடுத்துக் கூறுவது, காங்கிரஸ் ஆளவந்தார்களுக்குச் செய்யும் மகத்தான - மன்னிக்க முடியாத - தூக்குமேடை ஏற்ற வேண்டிய பெருங்குற்றம் என்பதை, அந்த ஆசிரியர்கள், இவ்வளவு காலத்திற்குப் பின்பும் தெரிந்து கொள்ளாதிருப்பது விந்தையாகத்தான் இருக்கிறது. வெள்ளை கவர்னர்கள் விட்டுப்போன மாளிகைகளில்தானே காங்கிரஸ் கவர்னர்கள் கொலு வீற்றிருக்கிறார்கள் என்பதை அந்த ஆசிரியர்கள் மறந்துவிட்டார்கள் போலும்! அந்தோ! பரிதாபம்!

அமைதியாக நடைபெற்ற ஆசிரியர் வயிற்றுப் போராட்டத்தை, காங்கிரஸ் அதிகாரப் பேய் நுழைந்து குருட்சேத்திரமாக மாற்றிவிட்டது.

கவர்னரைக் கண்டு குறைகளைப் போக்கிக் கொள்ள அமைதியாகச் சென்ற ஆசிரியர்களிடம், கவர்னர் நேரே செல்வதற்குப் பதிலாக, 144 தடை சட்டம் தூது போய் பேட்டி தந்தது! அதைத் தொடர்ந்து ஆசிரியர்களைக் கைது செய்யும் அடக்குமுறை! அதைத் தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்றாக, கண்ணீர்ப் புகை குண்டு, துப்பாக்கி ரவை குண்டு!

ஆறு உயிர் போயிற்று! பலர் படுகாயமுற்றனர்! பஸ்கள் சாம்பல்! டிராம்கள் தீக்கிரை! சென்ற ஆண்டு அலங்கோலம், மீண்டும் கல்கத்தா நகரை கவிழ்ந்துகொண்டுள்ளன!

இந்த அலங்கோலத்திற்கு யார் பொறுப்பாளிகள்? அமைதியாக அறப்போரில் ஈடுபட்ட ஆசிரியர்களா அல்லது அவர்களைக் காணவும் மறுத்து, அடக்குமுறைகளை அவிழ்த்துவிட்ட வங்க சர்க்காரா என்பதில் முடிவு கட்டும் பொறுப்பை வாசகர்களுக்கே-விட்டுவிடுகிறோம்!

கல்லக்குடி அறப்போர் புது முறுக்கோடு தொடங்கியது

சி. ஆர். காண விழைந்த டால்மியாபுரம் மீண்டும் கல்லக்குடியாக மாறிற்று!

திருச்சி, பிப் 18— ஆச்சாரியார் வருகைக்காக இரவோடு இரவாக ஏற்கனவே ஒட்டப்பட்டிருந்த 'கல்லக்குடி' என்ற தாள்களை கிழித்துவிட்டு, 'டால்மியாபுரம்' என்று வர்ணத்தால் எழுதப்பட்டிருந்ததை 16-2-54 காலை 9 மணிக்கு கல்லக்குடி அறப்போர் வீரர்களான தோழர்கள் மருதமுத்து, ராசு, ஆகியோர் தொண்டர் முகாமிலிருந்து, 'டால்மியாபுரம் என்ற பெயரை மாற்றுவோம்,' என்ற ஒலி முழக்கத்துடன் புறப்பட்டு, புகைவண்டி நிலையத்தில் மீண்டும் 'கல்லக்குடி' என்ற தாள்களை ஒட்டினர். வழக்கம் போல் போலீசார் பின்தொடர்ந்து வந்தனர்.

அதுபோலவே, 17—2—54 புதன் காலை அறப்போர் வீரர்கள் மருதமுத்து, ராசு முதலியவர்கள் கல்லக்குடி' என்ற தாள்களை ஒட்டிவிட்டு வெற்றியுடன் திரும்பினர்.

(ந—நி)

தர்மபுரிக்குப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை வருகை

—(:)—

பஞ்சாயத்து போர்டு வரவேற்பு அளிக்க முடிவு

1-3-54-ல் தர்மபுரிக்கு வரும் பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்களுக்கு தர்மபுரி பஞ்சாயத்து போர்டார் வரவேற்பு கொடுப்பதென ஏகமனதாக முடிவு செய்துள்ளனர்.

13—2—54-ல் கூடிய தனிக் கூட்டத்தில், மேற்படி முடிவை பஞ்சாயத்து போர்டார் செய்துள்ளனர்.

அங்கே தொழிற்சாலை! இங்கே குட்டநோய் விடுதி!!

புதுடெல்லி, பிப். 17— இந்தியாவில் 71 கோடி ரூபாய் செலவில் இந்திய அரசாங்கம் ஏற்படுத்த இருக்கும் இரும்பு எஃகு தொழிற்சாலையை ஒரிசா மாநிலத்தில் உள்ள ரௌர்கேலா என்ற இடத்தில் அமைக்க அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக இந்திய பாராளு மன்றத்தின் இருசபைகளிலும் உற்பத்தித் துறை அமைச்சர் கே. சி. ரெட்டி அறிக்கை வெளியிட்டார்.

தென்ஆற்காடு மாவட்டத்தில் அண்மையில் ஓர் குட்டநோய் விடுதி திறக்கப்பட்டது.

கோலாலம்பூர், பிப் 18— மலேயாவில் ஒவ்வொரு வீட்டிலும் விருந்தினர் பதிவுப் புத்தகம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது விருந்தினர்கள் யாராவது வந்தால் அவர்களைப் பற்றிய தகவல்களெல்லாம் இதில் குறிப்பிடப்படவேண்டுமாம். நகருக்குள் வந்துபோகும் விருந்தினர்களைப் பற்றி சந்தேகம் வந்தால் உடனே கண்டுபிடிக்கவே இந்த ஏற்பாடாகும்.

சட்டத்தின் கரம் வளைந்தது!

காசி, பிப் 18— காசி விசுவநாதர் கோயிலில் அரிசனங்கள் நுழைந்ததைத் தடுத்ததாக, சமூகக் குறைபாடுகள் நீக்கச் சட்டத்தின்கீழ் ராமராஜ்ய பரிஷத் தலைவர் சுவாமி கற்பாத்திரிஜியும், மற்றும் 50 பேரும் கைது செய்யப்பட்டனர்.

"மதுவிலக்கு சட்டத்தை ரத்து செய்க!"

"இல்லையேல் சட்டத்தை மீறுவோம்!"

ஆந்திர முன்னாள் மரமேறிகள் மாநாட்டில் தீர்மானம்

மசூலிப்பட்டிணம், பிப். 17— ஆந்திராவில் மதுவிலக்குச் சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்றும், இல்லாவிடில், ஒரு சத்தியாக்கிரகம் ஆரம்பித்து, பகிரங்கமாகக் கள் இறக்கி, அச்சட்டம் மீறப்படும் என்றும் ஆந்திர மாநில மரமேறிகள் மாநாட்டில் ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, ஒரு செயல் கமிட்டியும் நியமிக்கப்பட்டுள்ளது.

"மதுவிலக்கு அமுலில் சர்க்கார் தோல்வி யடைந்திருப்பதோடு, முன்னாள் மரமேறிகளுக்கு மாற்று வேலை தரவும் தவறிவிட்டனர்; என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து இதைக் கூறுகிறேன்," என்று முன்னாள் மரமேறிகள் மகாநாட்டில் பேசுகையில், கிருஷிகர் லோக் கட்சியின் உபதலைவரும், முன்னாள் மந்திரியுமான லட்சன்னா குறிப்பிட்டார்.

இந்தோ—சீனா போர்

செருக்கடி நிலைமை ஏற்படுமா?

சைகோன், பிப். 17— லாவோஸில் 10 லட்சம் மக்கள் வாழும் 36,000 சதுர மைல் பரப்பை கடந்த 2 மாதத்தில் 28,000 பிரெஞ்சுத் துருப்புகளுக்குச் சேதம் விளைவித்து 'விடுவித்துள்ள'தாக வியட்மின் தரப்பில் கூறப்படுகிறது.

* * *

வாஷிங்டன், பிப். 17— அமெரிக்கத் துருப்புகளை இந்தோ—சீனாவில் உபயோகிக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டால் ஐஸன்ஹவர் காங்கிரசை முன்னதாகக் கலந்தாலோசிக்க வாக்களித்துள்ளாராம்!

திருநெல்வேலியில் நூற்பு மில் அமைப்பு

ரூ. 10 லட்சம் கடனாகக் கிடைக்குமாம்!

புதுடில்லி, பிப். 17— திருநெல்வேலியில் ஒரு நூற்பு மில் அமைப்பதற்கு சென்னை மாநில கைத்தறி கூட்டுறவு சங்கத்திற்குக் கடனாக வழங்க, சென்னை சர்க்காருக்கு ரூ. 10 லட்சம் ஒதுக்கியிருப்பதாக மக்கள் சபையில் வர்த்தக மந்திரி அறிவித்துள்ளார்.

நெல்லை மாவட்டத்தில் பனைமர வரி ரத்து

சென்னை சர்க்கார் உத்திரவு

சென்னை, பிப். 18— பனைமர வரி சம்பந்தமாக செப்டம்பர் 16-ந் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்திரவுக்குப் பதிலாக சென்னை சர்க்காரால் கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது:—

திருநெல்வேலி மாவட்டத்தில் இதுவரை நிலவரியுடன் கூடவே பனைமர வரியும் சேர்த்து வசூலிக்கப்பட்டு வந்த நிலங்களின் புஞ்சை வரி இனிமேல் புதிய தரவரிசைப்படி கணக்கிடப்பட்டு வசூலிக்கப்படும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில், ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் தாலுக்காக்கள் இரண்டிலும் பனைமர வரி முற்றிலும் நீக்கப்படும் இப்புது உத்தரவு 1363-ம் பசலியிலிருந்து அமுலுக்கு வரும்.

கல்கத்தா துப்பாக்கிப் பிரயோக எதிரொலி

—o—

மருத்துவ நிலையத்தில் மேலும் மூவர் மடிந்தனர்

—o—

இதுவரை மடிந்தவர் தொகை ஆறு!

கல்கத்தா, பிப். 17—

ஆசிரியர்களின் பஞ்சப்படி உயர்வு போராட்டத்தை மேலும் நீடித்து நடத்துவதென உறுதி கொண்டுள்ளனர் ஆசிரியர் சங்கத்தினர்.

நகரின் முக்கிய பகுதிகளில் எல்லாம் பலத்த போலீஸ் பந்தோபஸ்து செய்யப்பட்டு இருக்கிறது. போலீஸ் பாதுகாப்புப் படையினர் இடைவிடாது நகர் தெருக்களில் சுற்றிச் சுற்றி வந்தவண்ணம் உள்ளனர்.

சர்க்கார் பஸ்-டிராம் போக்கு வரத்துக்கள் அறவே நிறுத்தப் பட்டுவிட்டன.

தனி நபர்களால் நடத்தப் பெறும் பஸ்களின் நடமாட்டத்தையும், கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் ஓடவிடாமல் தடுத்துவிட்டனர். இருந்தாலும் நடுப்பகலில் பலத்த போலீஸ் பாதுகாப்போடு அங்கொன்றும், இங்கொன்றுமாக பஸ்கள் சென்றன.

சர்க்கார் எதிர்கட்சியினர், நகரில் போடப்பட்டுள்ள தடை சட்டத்தை மீறி ஊர்வலமாகச் சென்று, நிதி அமைச்சர் வரவு—செலவு திட்டத்தை சமர்ப்பிக்கும்பொழுது சட்டசபை முன் ஆர்ப்பாட்டம் செய்வதென முடிவு கொண்டுள்ளனர்.

சர்க்காரின் தீவிரமான அடக்கு முறையின் பலனாக நிலைமை கட்டுக்குள்ளாக்கப் பட்டதானாலும், கலக உணர்ச்சி நீடித்துத்தான் இருக்கிறது. சிற்சில இடங்களில் எதிர்ப்புக் கிளர்ச்சிகள் தலை யெடுத்த வண்ணம் உள்ளன. கல்கத்தா நகரில் உள்ள கடைகள் எல்லாம் மூடிக் கிடக்கின்றன. ஒவ்வொரு கடையாக எதிர்ப்பினர் சென்று கடைகளை மூட வருமாறு கட்டளை இடுகின்றனர்.

செய்திச் சுருக்கம்

★

காராச்சி, பிப் 18—

பயிர் பாதுகாப்புகள் இலாகாவில், பெண்கள் எந்த வேலைக்கும் தகுதியில்லை என்று பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

* * *

லண்டன், பிப். 18—

அணுசக்தி இரகசியங்கள் குறித்து பிரிட்டிஷ் கைத்தொழில்களுக்குத் தகவல்கள் தெரிவிக்கப்படலாம் எனத் தெரிகிறது.

* * *

டோகியோ, பிப். 18—

தேசிய சீனா ஜனாதிபதி பதவியிலிருந்து விலகிவிட விரும்புவதாக சியாங்கே—ஷேக் அறிவித்திருக்கிறார்.

* * *

சென்னை, பிப். 18—

கோடை காலத்தில் பயிரிடப்படாத வயல்களில், பருத்தியைப் பயிராக்க விவசாயிகள் உத்தேசித்துள்ளனர்.

* * *

லண்டன், பிப். 18—

ஆசிய மாநாடு மே மாதம் கூட்டப்படலாம் என்றும், இதைக் கூட்டும் முயற்சியை இந்தியாவே மேற்கொள்ளலாம் என்றும் கூறப்படுகிறது.

* * *

லண்டன், பிப் 18—

பாரசீக சர்க்கார் தன் இராணுவத்தைப் பலப்படுத்த விருக்கிறது. 75,000 துருப்புகள் இப்போது உள்ளன; அவை 3,50,000-மாக அதிகரிக்கப்படும்.

* * *

புதுடில்லி, பிப் 18—

இமயத்தைச் சேர்ந்த 26,857 அடி உயரமுள்ள தவளகிரி மீது ஏற ஆர்ஜெண்டினா குழுவினர் நால்வர் இங்கு வந்துள்ளனர். 21-ம் தேதியன்று இன்னும் 7 பேர் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

* * *

லாகூர், பிப். 18—

பஞ்சாப் மாகாணத்தில் கைத்தொழில்கள் உபயோகத்திற்கு 'ஸூயி காஸ்' இன்னும் இரண்டு ஆண்டுகளில் கிடைத்துவிடும் என்று பஞ்சாப் பிரதம மந்திரி பெரோஸ்கான் நூன் அறிவித்தார்.

* * *

கௌஹாத்தி, பிப். 18—

அஸ்ஸாமில் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திட்டம் ஒன்று இந்திய சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. முதலில் இத்திட்டம் பரீட்சார்த்தமாக நடத்தப்படும். இதற்கு ரூ 26,000 செலவாகலாமாம்.

* * *

சென்னை, பிப். 18—

ஜெனரல் ஆஸ்பத்திரியில் உடம்பைப் பரிசோதிக்கும் 'கிளினிக்' ஒன்றை சென்னை சர்க்கார் ஏற்படுத்தியுள்ளனர். வாரத்தில் ஒருநாள் பிற்பகல் மட்டும் புதனன்று இக்கிளினிக் திறந்திருக்குமாம். ரூ. 20 கட்டணம் செலுத்தவேண்டும்.

கசையடி தண்டனை அவசியமா?

உள்நாட்டு மந்திரி தகவல்

புதுடில்லி, பிப். 18—

கசையடி தண்டனை அவசியமா, அவசியமில்லையா என்று மாநில சர்க்கார்களின் கருத்தை மத்திய சர்க்கார் அறிந்து வருகிறார்கள்.

கற்பழித்தல் போன்ற குற்றங்கள் சம்பந்தமாகக் கடைசி தண்டனையாக இது கையாளப்படுகிறதென்றும், 1909-ம் ஆண்டில் இதுசம்பந்தமாக இயற்றப்பட்ட சட்டத்தை சட்டப் புத்தகத்திலிருந்து எடுத்துவிடலாமா என்று யோசித்து வருவதாகவும் உள்நாட்டு மந்திரி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான்—துருக்கி உடன்படிக்கை

பிரிட்டனில் மௌனம்

லண்டன், பிப் 18—

பாகிஸ்தான்—துருக்கி பாதுகாப்பு—உடன்படிக்கை சம்பந்தமாக பிரிட்டிஷ் அயல்நாட்டிலாகா எவ்வித அபிப்பிராயத்தையும் வெளியிடாமல் மௌனம் சாதிக்கிறது. பாகிஸ்தானும் துருக்கியும் தங்கள் கருத்தை பிரிட்டிஷ் சர்க்காரிடம் தெரிவித்து விட்டதாகத் தெரிகிறது.

நிச்சயந்தானா?

லண்டன், பிப். 18—

பிரதம மந்திரி சர்ச்சில் ஜூன் மாதம் தனது பதவியை ராஜிநாமா செய்துவிடுவார் என்று பரபரப்பாகத் தெரிகிறது. ஈடன் பிரதம மந்திரி ஆகலாம் என்று குறிப்பிடப்படுகிறது.

குமாரசாமி ராஜா கவர்னராக்கப்பட்டதற்கு எதிர்ப்பு

கொடாச்சேரி—நாகை கூட்டங்கள் நடைபெறாது

★

18—2—54-ல் கொரடாச்சேரியிலும், 19—2—54ல், நாகையிலும் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் கலந்துகொள்ளவிருந்த பொதுக் கூட்டங்கள், 19—2—54 அன்று நடைபெறவிருக்கும் ஐவர் வழக்கின் காரணமாக நடைபெறாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கழகக் கூட்டங்கள்

★

காடாம்புலியூர்

20-2-54 மாலை 5-30 மணிக்கு

இடம்: ரேடியோ பார்க் அருகிலுள்ள மைதானம்

தலைவர்:

கே. டி. பி. பழனியப்பன்

பேசுவோர்:

இரே. இளம்வழுதி

ஏ. கோவிந்தசாமி, எம் எல் ஏ

திட்டக்குடி பொன்னம்பலம்

★

ஆரணி (வ. ஆ.)

20—2—54 மாலை 5 மணிக்கு

இடம்: கோசப்பாளையம் தர்மராசா கோயில் மைதானம்

பேசுபவர்:

சி. பி. சிற்றரசு

★

திருப்பூர்

20—2—54 சனி மாலை

இடம்: வள்ளுவர் திடல் (பழைய ரேடியோ மைதானம்)

தலைவர்: அ. ச. இளங்கோ

பேசுவோர்:

என். வி. நடராசன்

கே. பி. செல்வன், எம். சி.

பெங்களூர் தி. மு. கழகத் தோழர்களுக்கு

"21—2—54 ஞாயிறு மாலை 4 மணிக்கு, பிளாக்பல்லி தி. மு. கழகக் கட்டிடத்தில் மாவட்டக் கமிட்டி நடைபெறும். எனவே, மாவட்டப் பிரதிநிதிகள் அனைவரும் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது வருகைதர வேண்டுகிறேன். பொதுச் செயலாளர் பெங்களூர் வருவதைக் குறித்து யோசிக்கப்படும்," என மாவட்டச் செயலாளர் வே. இளஞ்சேரன் எழுதுகிறார்.

காரியத்தில் கண்!

டோக்கியோ, பிப் 17—

ஜப்பான், ஒரு தொழில் நாடுக்க உதவி ஒப்பந்தம் இலங்கையுடன் செய்து கொள்ள விருப்பம் தெரிவித்திருக்கிறது. இதேமாதிரி பாகிஸ்தானுடனும், இந்தியாவுடனும் செய்து கொள்ள விரும்புகிறது.

கடலூர் வட்டாரங்களில் காலரா

கடலூர், ஓ. டி., பிப் 15—

கடலூர் நகர சபையாரால் காலரா தடுப்பு ஊசிகள் உபயோகம் அதிகமாக இருந்தாலும் காலரா நோய் அதிகம் பரவி, பல இடங்களில் சிலர் இறந்தனர் என்றும் சொல்லப்படுகிறது.

அவர் பேச்சின்போது எதிர் கட்சியினர் இடங்கள் காலி

புவனேஸ்வர், பிப். 17—

ஒரிசா சட்ட சபையின் வரவு-செலவு திட்டக் கூட்டத்தை கவர்னர் குமாரசாமி ராஜா அவர்கள் துவக்கி வைத்துப் பேசினார்.

எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் சபையில் தங்கள் இடங்களை காலி செய்துவிட்டு வெளியே சென்றுவிட்டனர். திறப்புரையை முடித்துவிட்டு கவர்னர் வெளியே சென்ற பிறகுதான் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சபைக்குள் நுழைந்தனர்.

தங்கள் செயலுக்கு விளக்கம் கூறும்பொழுது, எதிர்க் கட்சி லைவரான சாரதாகர் சுபாகா, தமது தொகுதி மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்ட ஒருவரை கவர்னராக நியமித்திருப்பதைக் கண்டிப்பதற்கறிகுறியாகவே, கவர்னர் பேசும்பொழுது தாங்கள் வெளியேறிவிட்டதாகக் கூறினார்.

சென்னை முதல் அமைச்சராக இருந்த காலத்தில், ராஜா மீது தீவிரமான குற்றச்சாட்டுகளைச் சுமத்தப்பட்டு இருந்ததாகவும், கவர்னராக நியமனம் செய்யப்படுகிறவர்கள் ஐயத்திற்குத் துளியும் இடம் இல்லாத பரிசுத்தவான்களாக இருக்க வேண்டுமென்றும் எதிர்க் கட்சித் தலைவர் மேலும் குறிப்பிட்டார்.

சென்ற ஜனவரி 23-ந் தேதி முக்கிய எதிர்க கட்சித் தலைவர்களும், ஒரிசா மக்களும் திரண்டிருந்த பொதுக்கூட்டமொன்றில், ராஜா கவர்னராக நியமிக்கப்பட்டிருப்பதைக் குறித்து அதிருப்தி தெரிவித்தும், குடியரசு தலைவருக்கும், பிரதம மந்திரிக்கும் அதிருப்தியைத் தெரிவித்துத் தந்திகள் கொடுத்ததாகவும் சொல்லப்படுகிறது.

"ஒரு கவர்னர் நியமன விஷயத்தில் கருத்தறிவிக்க எதிர்க்கட்சியினருக்கு சட்டப்படி எந்த உரிமையும் இல்லாதபோதிலும், இத்தகைய நியமனங்களில் எதிர்ப்பைக் காட்டுவது தங்களுடைய கடமையாகும்" என்று அந்த எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

நடக்க இருப்பவை

திருமணம்

சென்னை, பிப் 18—

19—2—54 வெள்ளி மாலை 5 மணிக்கு தோழர் பே. தாஇன்மொழிக்கும், தோழியர் சுலோசனாவுக்கும் தோழர் கா அப்பாதுரை தலைமையில் திருமணம் நடைபெறும். பொதுச் செயலாளர் அண்ணாதுரை தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன் ஆகியோர் பேசுவர். இடம்: நெ. 13, நீலகண்ட நாயனார் தெரு, கொண்டித் தோப்பு.

★

உருவப்படத் திறப்பு விழா

சென்னை, பிப். 18—

19—2—54 அன்று பச்சையப்பன் கல்லூரிப் பள்ளி, மாணவர் தமிழ்க் கழகச் சார்பில், பாரதிதாசன், கா. சுப்ரமணிய பிள்ளை, சி மு. சுப்ரமணியபிள்ளை ஆகியோர் உருவப்படத் திறப்பு விழா முன்னாள் மேயர் மா. இராதாகிருட்டிணன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், டாக்டர் அ சிதம்பரநாதன் செட்டியார், த. செங்கல்வராயன் ஆகியோர் முறையே உருவப் படங்களைத் திறந்து வைப்பர்.

★

சொற் பயிற்சிக் கூட்டம்

சென்னை, பிப். 18—

வண்ணை, தியாகராயர் பகுத்தறிவு மன்ற சார்பில், 19-2-54 வெள்ளி மாலை 6 மணிக்கு சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெறும். தோழர் செல்வராசன் தலைமை தாங்குவார். தோழர்கள் பி கண்ணன், ஏ. குருசாமி, மு. கரிகாலன். வெற்றி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

கைத்தறி வாரம்

இந்திய சர்க்கார் திட்டம்

எல்லா மாநிலங்களிலும் கொண்டாடப்படும்

சென்னை, பிப். 17—

எல்லா மாநிலங்களிலும் கைத்தறி வாரம் கொண்டாடப்படவிருக்கிறது. இதற்காக இந்திய சர்க்கார் ரூ 1,35,000 ஒதுக்கியுள்ளது.

இந்திய சர்க்கார் ஒதுக்கியுள்ள பணத்திலிருந்து 'ஏ' பிரிவு மாநிலங்கள் தலா ரூ 5000-மும், 'பி' பிரிவு மாநிலங்கள் தலா ரூ. 3000-மும், 'சி' பிரிவு மாநிலங்கள் தலா ரூ 1000-மும் பெறும்.

இந்தக் கைத்தறி வாரத்தில் கைத்தறி சேவாளர்கள் ஊர்வலம், சேவாளர்கள் ஒத்துழைப்பு விஷயமாக சொற்பொழிவுகள், கைத்தறித் துணிகள் கண்காட்சி, பிரபல கைத்தொழில் ஸ்தாபனங்களுக்கான விளம்பரங்கள் ஆகியவை எல்லாம் நடத்தப்படும்.

இந்த வாரத்தைக் கொண்டாடும் தேதிகள் சீக்கிரத்தில் அகில-இந்திய கைத்தறி போர்டினால் நிர்ணயிக்கப்படும்.

இளைஞர் காங்கிரசார் மீதுள்ள வழக்கு

மதுரை, பிப். 17—

தி. மு. கழகத்தைச் சேர்ந்த படிப்பகத்தைச் சேதப்படுத்தியும், அதிலிருந்த சாமான்களுக்கு நெருப்பிட்டுக் கொளுத்தியும் குழப்பம் விளைவித்ததாக இளைஞர் காங்கிரசைச் சேர்ந்த வி. கோபால், எம். வீரையா, எம். அலிபார், சுப்புராமச்சாரி. மற்றும் 23 பேர்கள் மீது போலீசாரால் தொடரப்பட்ட ஜாமீன் வழக்கு இன்று நகர முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் பி என். தங்கமணி பி. ஏ., முன்பு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சர்க்கார் சார்பில் தோழர்கள் கிருஷ்ணசாமியும், சீனிவாசனும் சாட்சியமளித்தனர்.

வழக்கு மார்ச் 2-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நிலவரி உயருமா?

ஆந்திர சர்க்கார் நிலைமை

நெல்லூர், பிப். 16—

மேற்கொண்டு ஒரு கோடி ரூபாய் வருமானம் பெறுவதற்காக நிலவரியைச் சற்று உயர்த்துவது பற்றி ஆந்திர சர்க்கார் யோசித்துக் கொண்டிருப்பதாக ரெவினியூ மந்திரி கோடி ரெட்டி நகர சபை வரவேற்புக்கு பதிலளிக்கையில் கூறினார்.

வல்லம்படுகை தி. மு. க. முதல் ஆண்டு நிறைவு விழா

ஆசிரியர் : வேலாயுதம் படிப்பகம் திறப்பு விழா நிகழ்ச்சிகள் :

13—2—54 இரவு 7 மணிக்கு தோழர் ஆர். பாலகுருசாமி தலைமையில், மேற்படி ஆண்டு விழா நடைபெற்றது. ஆசிரியர் வேலாயுதம் படிப்பகத்தையும், படத் திறப்பு விழாவையும் தோழர் அ. பொன்னம்பலனார் திறந்து வைத்தார். தோழர்கள் இட்டப்பா, ஏக. தாமோதரம், இரா. நெடுஞ்செழியன், அ. பொன்னம்பலனார் ஆகியோர், ஆசிரியர் வேலாயுதத்தின் வாழ்க்கை வரலாறு பற்றியும், கொள்கை வழி உறுதியாக நின்று, அஞ்சா நெஞ்சுடன் எதிர்ப்புகளைத் தாங்கி, ஓயாது உழைத்த உத்தமரைக் கயவர்கள் கொலை செய்த அநீதியை விளக்கியும், அரசியலார் நடவடிக்கைகள் எடுத்து, வழக்கை விசாரிப்பது போல் நடித்து, இறுதியில் கைது செய்யப்பட்ட காங்கிரஸ்காரர்களையும் விடுதலை செய்துவிட்டு, வழக்கையும் ஒன்றுமில்லாமல் செய்து விட்ட போதிலும், அவர் தொண்டு பாராட்டப்படுவதைக் குறிப்பிட்டும், தி. மு. கழகத்தின் மும்முனைப் போராட்டங்களை விளக்கி விரிவுரையாற்றினர்.

தி. மு. க. கட்டிடத்திலும், வல்லத்துறை, பவழக்கடை ஆகிய இடங்களில் தி. மு. கழகக் கொடியை தோழர்கள் அ. பொன்னம்பலனார், இரா. நெடுஞ்செழியன் ஆகியவர்களால் உயர்த்தப்பட்டது.

அம்மாப்பேட்டை திருக்குறள் மன்றத் தோழர்கள் இசை நிகழ்ச்சிகளை பக்க வாத்தியங்களுடன் ஆரம்பத்தில் நிகழ்த்தினர்.

கீழ்க்கண்டவர்களிடமிருந்தும் அத்துக்குடி நிதிக்குப் பணம் கிடைத்தது.

சிதம்பரம் திராவிட இளைஞர் முன்னேற்றப் படிப்பகத்தார் சார்பில் சிதம்பரம் பெர்துமக்களிடம் வசூல் செய்து உதவியது ரூ. 25;

வல்லத்துறை தி. மு. க. தோழர்கள் ரூ 3;

பவழக்கடை தோழர் அஞ்சாப் புலி ரூ. 1—9—3;

கையொப்பமிட்ட வகையில் பல தோழர்களால் ரூ 1—1—0; —(ஆக மொத்தம் 30-10-3-யும்) அத்துக்குடி வழக்கு நிதி கணக்கில் சேர்க்கப் பெற்றது.

பொதுக் கூட்டத்தில் உண்டியல் மூலம் வசூல் செய்த தொகை ரூ 14—6—3-ம், வல்லம்படுகை தோழர் நாராயணசாமி அவர்கள் உதவிய ரூ 51-ம், ஆக. ரூ. 65—6—3 தென்னார்காடு மாவட்டம் விழுப்புரத்தில் கொடுக்கும் நிதி அளிப்புத் தொகையில் சேர்த்துக் கொள்வதாகக் கூறி தோழர் ஆர். பாலகுருசாமி அவர்கள் பெற்றுக் கொண்டார்.

வல்லம்படுகைக் கூட்டத்தில் அத்துக்குடி நிதிக்கு ரூ 101 தருவதாகக் கூறியபடி கொடுக்க முடியவில்லையென்றும் கூறிவிட்டார்கள்.

மதுரை கருப்பையா கொலை வழக்கு

மதுரை, பிப். 15—

இளைஞர் காங்கிரசைச்சேர்ந்த எம். ஓ. கருப்பையா என்பவரை அரிவாளால் வெட்டிக் கொலை செய்ததாக பூக்கடைத் தெருவைச் சேர்ந்த பாண்டி என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கு மதுரை மாவட்ட செஷன்ஸ் நீதிபதி என். ரெங்கராசன் ஐ. சி. எஸ். முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது கருப்பையாவின் சகோதரர் எம். ஓ. கந்தன் அரசாங்க சார்பில் சாட்சியமளித்தார்; தங்கவேலு என்பவரும் சாட்சியம் கூறினர்.

பிரிட்டனில் மோட்டார் சைகிள் உற்பத்தி

ஒரு இந்தியர் வெற்றிகரமாக நடத்துகிறார்

லண்டன், பிப். 14—

பிரிட்டனில் மோட்டார் சைகிள் உற்பத்தியை பிரிட்டிஷாருக்குப் போட்டியாக ஒரு இந்தியர் வெற்றிகரமாக நடத்துகிறார்.

இவர், ஜே. டி. பிர்லாவை பிரிட்டனில் சந்திக்க நேரிட்டது. அப்போது பிர்லா, ஹிந்துஸ்தான் மோட்டார் தயாரிப்பு விஷயமாக நப்பீல்ட் நிலையத்துடன் பேச்சு வார்த்தைகள் நடத்த வந்திருந்தார். 'பிர்லா மோட்டார் உற்பத்தி செய்தால், நாம் ஏன் மோட்டார் சைகிளாவது உற்பத்தி செய்யக் கூடாது?' என்று அவருக்குத் தோன்றியதாம்!

பின்னர், பெரும் முயற்சியின் மீது லைசென்சும், இரும்புக் கோட்டாவும் பெற்று, ஜார்ஜ் பிரவுன் தொழிற்சாலையை வாங்கினார்.

1949-ல் தான் இவருடைய மோட்டார் சைகிள்கள் பிரிட்டிஷ் மக்களுக்குத் திருப்தியளிக்க ஆரம்பித்தது. இப்போது இவருடைய கம்பெனிக்கு ஆர்டர்கள் வந்தவண்ணமிருக்கின்றன.

இந்தியாவில் மின்சார உற்பத்தி

எண்ணிக்கை தரும் விவரம்

புதுடில்லி பிப். 14—

1953 அக்டோபர் மாதத்தில், இந்தியாவில் உள்ள பொது உபயோக மின்சார உற்பத்தி நிலையங்களில் செப்டம்பர் மாதத்தைக் காட்டிலும் மொத்தம் 65 லட்சம் கிலோவாட்டவர் மின்சாரம் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. பரிசீலனை மாதத்தில் உற்பத்தியான மின்சார சக்தி 5,830 லட்சம் கிலோவாட்டவராகும்: இதில், 4,587 கிலோவாட்டவர் மின்சாரம், உபயோகிப்பவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டது. இந்தக் கணக்குகளில், மொத்தம் 634 மின்சார நிலையங்கள் பற்றிய தகவல்கள் அடங்கியிருக்கின்றன:

1952 அக்டோபர் மாதத்தில் 5,482 லட்சம் கிலோவாட்டவர் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது; 4,415 கிலோவாட்டவர் மின்சாரம் விற்பனை செய்யப்பட்டது. 1939 அக்டோபர் மாதத்தில் மொத்தம் 2 164 லட்சம் கிலோவாட்டவர் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது; மொத்தம் 1,800 லட்சம் கிலோவாட்டவர் மின்சாரம் விற்பனை செய்யப்பட்டது.

காந்தியார் சாந்தியடைய......

குட்ட நோய் ஒழிக்கப்படுமோ?

ஓமந்தூரார் கவலை

கடலூர், பிப் 16—

"இந்த குட்டரோக நிவாரண சங்க கடலூர் கிளையின் ஆதரவில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் சென்னை முன்னாள் பிரதமர் ஓ. பி. ராமசாமி ரெட்டியார் கலந்துகொண்டு பேசுகையில் மருத்துவ விடுதிகளில் இன்னும் போதிய மருந்துகள் கிடைக்கப் பெறவில்லை; விழுப்புரம் தாலுக்காவில் ஒரு குட்டநோய்க்காரர் ஆஸ்பத்திரியில் மருந்து இல்லாமலிருந்தபோலேயே தற்கொலை செய்து கொண்டார்; இந்த நிலை நீடிக்கக் கூடாது; அரசாங்கம் இதில் கவனம் செலுத்தவேண்டும்," என்றார்.

சென்னை மாநில குட்டரோக நிவாரணக் கழகச் செயலாளர் பேசுகையில், "குட்ட நோய் விடுதியைத்திறந்துவைக்க காந்தியாரை ஒருமுறை அழைத்தேன்; இறக்க வரமாட்டேன்—மூடவேண்டுமானால் வருகிறேன் என்றார்; எனவே, 10 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றினால் இந்த நோயை ஒழித்துவிடலாம்," என்றார்.

ஆபாச புத்தகங்கள் தீயிலிடப்பட்டன!

சென்னை, பிப். 16—

மக்களின் கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டும் புத்தகங்களையும், பிரசுரங்களையும் கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தால் அவைகளைக் கைப்பற்றும்படி சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன்படி மைலாப்பூர், திருவல்லிக்கேணி, ஜார்ஜ் டவுன் ஆகிய இடங்களில் உள்ள பிரசுராலயங்களில் போலீசார் புகுந்து அப்புத்தகங்களில் சுமார் 1,600 புத்தகங்களைக் கைப்பற்றி அந்தந்த இடங்களிலேயே அதைக் கொளுத்தினார்களாம்.

"காமம் பலவிதம்" என்ற புத்தகமும், "நிர்வாண லீலை" என்ற புத்தகமும்தான் கைப்பற்றப்பட்டவைகளில் முதன்மையானதாகும்!

தெ. ஆ. இந்தியர்கள் பணம் கொடுத்து கல்வி கற்பர்!

டர்பன், பிப். 18—

தென்னாப்பிரிக்க இந்தியர்கள் கல்வியின் முக்கியத்துவத்தை கண்டு தெளிந்துகொண்டிருக்கின்றனர் என்றும், பணம் கொடுத்து கல்வி கற்க அவர்கள் தயார் என்றும் கூறப்படுகிறது.

இந்தியாவில், ஜப்பானிய நெல் சாகுபடி முறையில் பல்வேறு அம்சங்கள் கையாளப்பட்டு சாகுபடி நடைபெற்றுவரும் பிரதேசங்களின் மொத்த விஸ்தீரணம் சுமார் 2 60 லட்சம் ஏக்கராவாகும்.

★★★★★·★★★★★★★★★★★★★★★

தி. மு. கழக
பொதுக் குழுக் கூட்டம்

★

தி. மு. கழகப் பொதுக் குழுக் கூட்டம் 7—3—1954 ஞாயிறன்று திருச்சியில் கூடும். விபரம் அடுத்த அறிக்கையில்.

சென்னை, 5-2-54. சி. என். அண்ணாதுரை, பொதுச் செயலாளர்.

★★★★★★★★★★·★★★★★★★★★★

கருணாகரன் — இலட்சுமி திருமணம்

பாராட்டு விழா நிகழ்ச்சி

சென்னை, பிப். 16—

தோழர் டி. எஸ். கருணாகரன்—தோழியர் இலட்சுமி வாழ்க்கை ஒப்பந்தம் 15—2—54 காலை அடையாறு, காந்திநகர், முதல் வீதி 26-ம் எண்ணுள்ள இல்லத்தில் சீர்திருத்த முறைப்படி, எவ்வித சடங்குகளுமின்றி நடைபெற்றது.

மாலை 6 மணிக்கு தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் மணமக்களைப் பாராட்டும் விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

நடிகர் தோழர் கிருஷ்ணன் அவர்கள் ஆரம்பத்தில் தமிழ் இசை பாடினார்.

தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர்கள் நெடுஞ்செழியன், க. அன்பழகன், மு. கருணாநிதி, என். வி. நடராசன், கா. அப்பாதுரையார், நாரண - துரைக்கண்ணன், நடிகர் நாராயணன், சர்மா, தோழர் அண்ணாதுரை ஆகியவர்கள் மணமக்களைப் பாராட்டி வாழ்த்தினர்.

மணமக்களுக்குப் பல தோழர்கள் அன்பளிப்பாக பல பொருள்களை வழங்கினர்.

தோழர் கே. ஆர். ராமசாமி, தோழியர் கல்யாணி ஆகியவர்கள் யாவரையும் வரவேற்று இறுதியில் நன்றி கூறினர். விருந்தும் சிறப்பாக நடைபெற்றது.

மணமக்கள் சார்பில், 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 25-ம், அத்துக்குடி வழக்கு நிதிக்கு ரூ. 26-ம் ஆக ரூ. 51 தோழர் அ. பொன்னம்பலனார் அவர்களிடம் அளிக்கப்பட்டது—பெற்றுக் கொண்டோம்—நன்றியுடையது—(பொறுப்பாளர்).

★

திருமணங்கள்

தைத் திங்கள் 25-ம் நாள் குரிய நிலையில் தோழர் சோமசுந்தரத்திற்கும், இராமசுவதிக்கும் நடைபெற்ற திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்காக ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

* * *

சென்னை, பிப். 16—

சென்னை அயன்புரத்தில் தோழர் இருதயநாதனுக்கும்—தோழியர் லில்லியம்மைக்கும் திருத்திய முறையில் காஞ்சி—மணிமொழியார் தலைமையில், 14—2—54 அன்று திருமணம் நடைபெற்றது. தோழர்கள் வி. என். கோவிந்தராசன் முதலை—ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் 'திருத்திய திருமணம்' குறித்துப் பேசினர். அதன் நினைவாக நம் நாடு வளர்ச்சிக்கு ரூ 1/ தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்

* * *

கடலூர் என். டி. வர்த்தக சங்கத்தில் 8—2—54 காலை 6 மணி யளவில் தோழர் வி தண்டபாணி—தோழியர் சாரதாவதிக்கும் திருமணம் நடைபெற்றது. வழக்கறிஞர் இரா இளம்வழுதி தலைமை வகித்தார்; தோழர்கள் சித்தார்த்தன், கோ சாமிநாதன், எஸ். அஜீஸ் வாழ்த்துரை வழங்கினர்.

* * *

8—2—54 காலை பண்ருட்டியை அடுத்த விழமங்கலத்தில் தோழர் என. வரதப்பன், தலைமையில், தோழர் வெ. சந்தனம்—தோழியர் காசியம்மை சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர்

18 கோடி ரூபாய் பெறுமான நூல்!

1952—53-ம் ஆண்டில், கைத்தறித் துணி உற்பத்தியில் 48 கோடி ரூபாய் பெறுமான முன்ன நூல்கள் உபயோகிக்கப்பட்டன.

ஆசிரியருக்குக் கடிதம்

கோலேக்திசள் கவனத்திற்கு!

ஆசிரியர் : 'நம் நாடு,'
சென்னை.

ஐயா,

தி. மு. கழகத்தைச் சேர்ந்த தோழர்களைப் பல காரணங்கள் காட்டி அநியாயமாக சிறையினுள் தள்ளும் இந்த அரசாங்கம், நாட்டில் பாமர மக்களை எளிதில் ஏமாற்றிப் பணம் பறித்துக் கொண்டு போகும் ஒரு கூட்டம் இருப்பதைப்பற்றி யோசிப்பது இல்லை போலும்!

டாலர் நாட்டில் நடக்கும் பருத்தி மார்க்கெட்டின் விலையை ஒரு சூதாட்டமாக ஏற்படுத்தி, அதற்காக நகரில் உள்ள மூலை முடுக்குகளில் எல்லாம் ஆட்களை உட்கார வைத்து பாமர மக்களிடம் 1 ரூபாய் வாங்கி, அவர்கள் சொல்லும் நம்பர் வந்தால் 64 ரூபாய் கொடுப்பதாக ஆசை காட்டி அவர்களின் அன்றாட வருவாயை பிடுங்கிக் கொள்கிறது இக்கூட்டம்!

இந்த சூதாட்டம் வளர்ந்து வருவதைப் பார்த்தால், ஒரு வேளை போலீஸ் அதிகாரிகளும், காங்கிரஸ் கட்சியினரும இதற்கு உடந்தையாக இருந்து பாதுகாப்பு அளித்து வருகிறார்களோ எனச் சந்தேகிக்க வேண்டியதாக இருக்கிறது.

குடியிருப்பதினால்தான், பாமர மக்கள், தங்களின் அன்றாட வருவாயை அதில் ஒழித்துவிட்டு, குடும்பத்தைக் கெடுக்கிறார்கள் என்ற ஒரு காரணத்தைக் காட்டி, மதுவை ஒழித்த இந்த அரசாங்கம், இந்த சூதாட்டத்தை மட்டும் விட்டுவைத்து, பார்த்துக்கொண்டிருப்பது ஏன்?

சில சமயங்களில் நீதி தவறாத சில போலீஸ் அதிகாரிகள் வழக்குத் தொடுத்து நீதிமன்றம் போனாலும், அபராதம்தான் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. வாரத்தில் பல்லாயிரக் கணக்கான ரூபாய்களைச் சம்பாதிக்கும் இக்கூட்டம், இந்த அபராதங்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை!

ஆகையால், இனிமேலாவது அரசாங்கமும், போலீஸ் அதிகாரிகளும் உடனடியாக நடவடிக்கைகள் தொடுத்து, இந்தச் சூதாட்டத்தை ஒழிக்க முன்வருவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

ஓர் அனுதாபி,
சென்னை.

அறந்தாங்கி தி. மு. கழகம்

5—2—54 மாலை செயற்குழு கூட்டம், கழகக் கட்டிடத்தில், தோழர் ஆர். அசோகன் தலைமையில் கூடியது. அதுபோது, தோழர் எம். என். ராய் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டதுடன், 16—1—54-ல் நடைபெற்ற பொங்கல் விழா கூட்ட வரவு—செலவு, இருப்பு கணக்குகள் பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அந்தமானில் குடியேறும் அகதி குடும்பங்கள்

கல்கத்தா, பிப். 18—

அந்தமானில் குடியேறுவதற்காக 118 அகதி குடும்பத்தினர் (430 பேர்) இங்கிருந்து புறப்பட்டுச் சென்றிருக்கின்றனர்.

மேற்கு வங்க பிரதமர் ஒரு குடும்பத்திற்கு ஒரு கொசு வலை வீதம் பரிசளித்திருக்கிறார். பாடா செருப்பு கம்பெனியார், இந்த அகதிகளுக்கு செருப்புகளை இலவசமாகக் கொடுத்துள்ளனர்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அமுதி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, ஞாயிறு நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.